சம்பந்தப்பட்ட துறைகளும், மாவட்ட நிருவாகமும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 265, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

265—

எரிவாயு சிலிண்டர்

***4457— திரு. எல். வெங்கடேசன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏழை மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் குறைந்த விலையில் எரிவாயு சிலிண்டர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள எண்ணெய் நிறுவனங்களின் எரிவாயு முகவர்களாக தமிழ்நாட்டில் மொத்தம் 780 முகவர்கள் உள்ளனர். இதில் கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் இயங்கும் முகவர்களின் எண்ணிக்கை வெறும் 28 மட்டுமே. வீட்டு உபயோக எரிவாயு உருளைகளுக்கான விலையானது, மத்திய அரசால் நிர்ணயிக்கப்படுகிறது. எனினும், தமிழகத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எரிவாயு உருளைக்கான 5% VAT *வரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்துள்ளார்கள். இதனைத் தவிர்த்து, கூட்டுறவு நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஒரு தனி நிறுவனம் ஆகும். இவை எரிவாயு உருளை முகவர்களாக மட்டும் செயல்படுவதால், கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் விநியோகிக்கப்படும் எரிவாயு உருளைகளை மட்டும் குறைந்த விலையில் வழங்குவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விலையைக் குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்று சொல்லியிருக்கின்றார்கள். அதே சமயத்திலே, மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டினுள் -- எண்ணெய் நிறுவனங்களுடைய கட்டுப்பாட்டிலே, எரிவாயு முகவர்கள் இருந்தாலும், தற்போது விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் தாலுகாவிலே, 37,000 பேர் எரிவாயு cylinder இணைப்பு பெற்றவர்கள் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே ஒரு எரிவாயு cylinder மீண்டும் இணைப்பு பெறுவதற்கு குறைந்தபட்சம் 60 நாட்களாகிறது. எனவே, இதையெல்லாம் கருத்திற்கொண்டு, தமிழக அரசு -- அதாவது, தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாட்டிலே 4,534 இருக்கின்றன. ஒரு தாலுகாவிலே குறைந்தபட்சம் 5 அல்லது 6 தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் தேர்வுசெய்து, நான் விலையைக் குறைக்கச் சொல்லவில்லை. அந்தச் சங்கங்களே முகவர்களாகச் செயல்பட்டு கிராம மக்களுக்கு, மாநகராட்சியிலோ, நகராட்சியிலோ எளிதாகக் கிடைக்கச் செய்யலாம். நகரப் பகுதிகளிலே ஒரு மாதத்திலோ, 40 நாட்களிலோ கிடைக்கிறது. ஆனால், கிராமப் பகுதியிலே, 60 நாட்கள், 70 நாட்கள் ஆகின்றன. எனவே தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களில், சில சங்கங்கள் இந்தப் பணியை மேற்கொண்டு மக்களுக்கு நன்மை செய்ய முன்வருமா எனவும், அதற்கு அரசு ஆவன செய்யுமா எனவும், தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதில், அதற்கான சாத்தியக்கூறுகளே இல்லை. இரண்டாவது, இப்போது மூன்று நிறுவனங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பவை. Hindustan Petroleum, Indian Oil Corporation மற்றும் Bharat Petroleum Corporation போன்ற எரிவாயு நிறுவனங்களின் முகவர்கள்தான் எரிவாயு உருளைகளைப் பொது மக்களுக்கு வழங்குகிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிற்கு

2012 மே 15]

அனைத்துத் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களும் இதற்கு முகவர்களாக இல்லை. இவற்றில் மொத்தமே 28 முகவர்கள்தான் கூட்டுறவுத் துறையில் செயல்படுகிறார்கள், கோயம்புத்தூர், மதுரை, பார்க் டவுன்- சென்னையில், பெரம்பலூர், சேலம், திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, சிந்தாமணி, டி.யு.சி.எஸ் 18; ஆக, 28 இடங்களில் மட்டுமே முகவர்களாகச் செயல்படுகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதற்கேற்ப அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 266, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

266—

புறவழிச் சாலை

***6447—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) பொள்ளாச்சி நகருக்குப் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி நகருக்குப் புறவழிச் சாலை அமைப்பதற்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.